பொது சேவையைப் பெறும் வாய்ப்பை மேம்படுத்த, இந்தக் கோட்டாட்சியர் அலுவலகத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகை, பரப்பளவு, வருவாய்க் கிராமங்கள், வட்டங்கள் அதனுடைய அடிப்படையிலே புதிய கோட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தகுதியின் அடிப்படையில் புதிய கோட்டம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

69—

தொழிற்பேட்டை

***2103—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் சுமார் 2 இலட்சம் மக்கள் வசிக்கின்ற ஒரு மிகப் பெரிய ஒன்றியம். இந்த ஒன்றியத்திலே, குறிப்பாக விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வசித்து வருகின்றார்கள். ஏற்கெனவே, நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, தலைவர் கலைஞர் அவர்கள் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அந்த ஒன்றியத்தை அறிவித்தார்கள். அங்கே விவசாயிகள் இரண்டு போகம் சாகுபடி செய்த நிலைமை மாறி, மழை இல்லாத சூழ்நிலையில், தற்பொழுது ஒரு போகம் செய்யக்கூடிய நிலைகூட இல்லாத நிலைமையிலே விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். எனவே, அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை அமைத்தால் அங்கு வேலையில்லாமல் வாடுகின்றவர்கள். . .*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. க. சுந்தர்: *பல்லாயிரக்கணக்கான பேர் கல்வி அறிவு பெற்றும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆதலால் இன்றைக்கு சுய தொழில் தொடங்கலாம் என்று பல இளைஞர்கள் அந்த வட்டாரத்திலே இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் தொழிற்பேட்டையை அமைக்கின்ற வகையில் முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் பகுதியைப் பொறுத்தவரையில், உத்திரமேரூர் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இதில் 15 முதல் 50 ஏக்கர் வரையிலான அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏதும் அங்கு இல்லை எனவும், அங்கு விவசாய நிலங்கள் மட்டுமே*

உள்ளன எனவும் காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உகந்த நிலம் கிடைக்கப்பெறாததால், அங்கு சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் அன்னாத்தூர், சிறுபினாயூர் ஊராட்சிகளில் 50-லிருந்து 60 ஏக்கர் வரை அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக இருக்கின்றார்கள். பல நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகிறார்கள் என்பதால், அவருக்கு உத்திரமேரூர் பகுதிகளைப் பற்றி நன்கு தெரியும். சிறுபினாயூர் மற்றும் அன்னாத்தூர் ஊராட்சிகளில் 60 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசுப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற அளவிற்கு நிலங்கள் இருப்பதால், அந்த இடங்களில் சிட்கோ உதவியுடன் தொழிற்பேட்டை அமைக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். எனது தொகுதி சென்னைக்குப் பக்கத்தில் இருக்கின்ற ஒரு தொகுதி. அந்தத் தொகுதி மக்கள் மிகவும் ஆவலோடு இருக்கிறார்கள். எனவே, அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அந்த கிராமப் பகுதிகளில் புதிய தொழிற்பேட்டை அமைக்க உகந்த நிலங்கள் கண்டறியப்பட்டு, போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வம் உள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், அவர்களின் தேவையின் அடிப்படையில், மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, சிட்கோ தொழிற்பேட்டை*

2018 மார்ச் 21]

அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். அதேபோல, தொழில் முனைவோர்கள் சங்கம் குறைந்தபட்சம் 50 ஏக்கர் தனியார் நிலங்களுடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வந்தால், அதுகுறித்து மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

அடிப்படை வசதிகள்

***4043—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், கரிசல்குளம்பட்டி மற்றும் கிருஷ்ணன்கோவிலிலுள்ள ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவோடும், துணிவோடும், கருணையோடும், திறமையோடும், ஈரமோடும், வீரமோடும் தன்னையே மெய்வருத்தி தரணியை உயர்த்தி, அடுப்பங்கரையில் இருந்த பெண்களை அதிரடிப் படைக்குக் கொண்டுவந்தவர்; தொட்டிலை ஆட்டிய பெண்களை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்த தனிப் பெருந்தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புனித அவையில் முழு உருவப் படத்தினைத் திறந்து வைத்து,*